**தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களம்**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

----------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

----------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும்.

பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

-----------------------------

**(அ) மூலதன செலவினம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 நிதிக்கூற்றுக்களின் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரகாரம் செலவினக் கூற்றில் (ஏசீஏ-2 (1)) பிரகாரம் மூலதன சொத்துக்கள் | ரூபா 78,328,980 என்பது ஆண்டினுள் கையகப்படுத்திய மூலதன சொத்துக்களின் ஒட்டுமொத்த | இயந்திரங்கள் மற்றும் இயந்திர தொகுதிகள் உள்ளடங்கலாக அனைத்து மூலதன சொத்துக்களும் |

| | | | |
|---|---|---|---|
| | கையகப்படுத்துவதற்காக ஆண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 78,328,980 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் ஆண்டினுள் நிதி அல்லாச் சொத்துக்கள் கொள்வனவு கூட்டுத்தொகை ரூபா 27,181,790 என குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ஆண்டின் மூலதன சொத்துக்கள் கையகப்படுத்தியமைக்கு ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 51,147,190 குறைவாக நிதி அல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | பெறுமதியாவதுடன், நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ள ரூபா 27,181,790 என்பது இயந்திரங்கள் மற்றும் இயந்திர தொகுதிகளின் பெறுமதி மட்டுமாகும். | கையகப்படுத்தல் நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ii) | 2020 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றின் (ஏசீஏ-6) கூட்டு பெறுமதி ரூபா 77,967,446 ஆகும். 2021 ஆம் ஆண்டின் நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றின் ஆரம்ப மீதி ரூபா 91,659,556 என குறிப்பிடப்பட்டிருந்தமையினால் 2021 ஆம் ஆண்டின் நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றின் (ஏசீஏ-6) ஆரம்ப மீதி ரூபா 13,692,110 அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆரம்ப மீதி சீராக்கல் காரணத்தினால் இயந்திரம் மற்றும் இயந்திர தொகுதிகளின் ஆரம்ப மீதி மாற்றமடைந்துள்ளது. | 2021 இன் ஆரம்ப நிதி அல்லாச் சொத்துக்களின் மீதிக்கு மேற்கொண்ட சீராக்கல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | -------------------------------- | --------------------------- | --------------------------- |
| (i) | கொழும்பு தேசிய நூதனசாலை அமைந்துள்ள 4.6317 ஹெக்டெயர் ஆன காணி 2022 மார்ச் 29 ஆம் திகதியாகையில் நூதனசாலைகள் திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களினுள் உள்ளடக்கப்பட்ட | காணியினை மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், அறிக்கை பெறப்பட்டவுடன் கணக்கிடப்படும். | பிரதான அலுவலக கட்டிடம் மற்றும் காணி மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் அக் காணி மற்றும் கட்டிடம் 2013 ஆம் ஆண்டில் மேற்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முறையே ரூபா 10,002,369,340 மற்றும் ரூபா 800,000,000 என கணக்கிடப்பட்டிருந்தது. | | |
| (ii) திணைக்களத்தின் நூதனசாலையினுள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள நூதன பொருட்கள் தொடர்பாக பௌதீக ஆய்வொன்று மேற்கொண்டு அவ் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அப் பொருட்கள் 2018 ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் 2021 ஆம் ஆண்டில் 06 பிரிவுகளில் மட்டும் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. அவ் ஆய்வு குழுவின் இறுதி அறிக்கையும் 2022 மார்ச் மாதம் வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மீண்டும் 2023 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கண்காட்சிக்காக காணப்படுகின்ற நூதனசாலை பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டு அவ் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(i) பிணைகள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைகள் பதிவேடு தயாரிக்கப்பட்டு ஓட்டுனர்களின் பிணை வைத்தல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ii) மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | இந்த பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க கட்டிடங்களிலுள்ள அனைத்து மின்சார பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| **(iii) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுநர் பதிவேடு** | | |
| 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுநர் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது. | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கமைய கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுநர் பதிவேடு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் இறுதி கட்டுநிதி பொழிப்பு அறிக்கை (SA – 70) பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு கூட்டுத்தொகை ரூபா 375,440,570 ஆக காணப்பட்ட போதிலும், நிதிக் கூற்றுக்களுடனான கட்டுநிதி இணக்க கூற்று பிரகாரம் (ஏசீஏ-3) மற்றும் கட்டுநிதி பெறுவனவு ஆவணங்களின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு கூட்டுத்தொகை ரூபா 368,469,291 ஆகியமையினால் திறைச்சேரி அறிக்கைகளுடன் ஒப்பிடும் போது ரூபா 6,971,279 ஆன கட்டுநிதி பெறுவனவு வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | கட்டுநிதி பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பொழிப்பு அறிக்கை பிரகாரம் பெறுவனவு ரூபா 368,469,291 என உறுதி செய்கின்றேன். | திறைச்சேரி புத்தகங்கள் பிரகாரம் கட்டுநிதி மீதியின் வித்தியாசம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிடகொடுவ ஓலந்த நூதனசாலையின் வளம்பேணல் பழுதுபார்த்தலுக்குரிய ஒப்பந்தத்தின் பிரகாரம் அப் பணி 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 மே 01 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 30 ஆம் திகதியாகையில் 02 சந்தர்ப்பங்களின் போது கால நீடிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2022 மார்ச் இறுதி வரையிலும் அப் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஒப்பந்தம் உரிய முறையில் நிறைவேற்றப்படாமை காரணத்தினால் நாளாந்தம் 0.05 சதவீத தாமதக் கட்டணம் ஒப்பந்தத்தின் பிரகாரம் (Delay charges) அறவிடப்பட வேண்டிய போதிலும், அத் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி விலைப்பட்டியலில் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | தாமதக் கட்டணம் (Delay charges) ஒப்பந்தத்தின் பிரகாரம் அறவிடப்படல் வேண்டும். |

## 2.3. பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல் தொடர்பாக பரீட்சிக்கும் போது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் 10 செலவின விடயங்களுக்கு தொடர்புடைய நிதியேற்பாடு சேமிப்பினை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 2,978,623 ஆன பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. | சுத்திகரிப்பு, நீர், மின்சாரம், தொலைப்பேசி என்பற்றிற்கான விலைப்பட்டியல்கள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நிதியற்பாடு சேமிப்பினை மிகைக்காது பொறுப்புக்களுக்கு உட்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.4 எல்லைகள் மீறுதல்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நூதனசாலைகள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு பெறுவனவுகளின் குறைந்தபட்ச எல்லை ரூபா 10,800,000 ஆக காணப்பட்டதுடன், அவ் எல்லை ரூபா 9,000,000 வரை திருத்துவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், 2022 மார்ச் மாதம் வரை அவ் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 10,800,000 ஆக காணப்பட்டதுடன், ஆண்டினுள் மொத்த பெறுவனவு ரூபா 9,162,499 ஆகியமையினால் கூட்டுத்தொகை ரூபா 1,637,501 இனால் குறைந்தபட்ச பெறுவனவு எல்லையை எட்டியிருக்கவில்லை. | எல்லை திருத்தத்திற்கு தொடர்புடைய விஞ்ஞாபனம் நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறைந்தபட்ச பெறுவனவு எல்லையை அடைவதற்கு அல்லது எல்லை திருத்தப்பட்டு அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமை | | |
| (அ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | திணைக்களத்திற்கு சொந்தமான 05 மோட்டார் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக 2019 ஆண்டின் பின்னர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்-கவில்லை. | இந்த வாகனங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் எரிப்பொருள் பயன்பாட்டினை பரிசோதிக்கின்றேன். | இந்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | | | |
| | (i) நிதி பிரமாணம் 268 (அ) மற்றும் 1646 | - | இந்த நிதி பிரமாணம் பிரகாரம் மாதாந்த பொழிப்பு அறிக்கையுடன் ஓட்டக் குறிப்பு விபரங்கள் உரிய திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க-வில்லை. | மாதாந்த பொழிப்பு அறிக்கை தனியாக சமர்ப்பிக்கப்பட்டிராத-துடன், எதிர்காலத்தில் சமர்ப்பிக்கின்றேன். | இந்த நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) நிதி பிரமாணம் 1645 (அ) | - | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களுக்காக லொங் குறிப்பு புத்தகங்கள் பேணிச் செல்லப்பட்ட போதிலும், அவற்றில் நாளதுவரையாக்க-ப்பட்ட தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்க-வில்லை. | கைதவறுதலாக லொங் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டி -ருக்கவில்லை. எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | இந்த நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 01 இன் (ஆ) ஆம் பிரிவு | - | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணித்த 03 உத்தியோகத்தர்க-ளுக்கு தொடர்புடைய கூட்டுத்தொகை ரூபா 229,420 ஆன தொகை தீர்க்கப்பட்டிருக்க-வில்லை | மரண பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுவதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தினால் 2011 ஆகஸ்ட் 10 ஆம் திகதி தொடக்கம் 2021 யூலை 31 ஆம் திகதி வரை 10 ஆண்டுகள் காலப்பகுதிக்காக குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்று கைப்பணிகள் சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன் புனரமைப்பு நடவடிக்கைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், திணைக்களத்தின் இணக்கமின்றி 2013 ஆம் ஆண்டில் அக் குத்தகை காலம் 35 ஆண்டுகள் வரை நீடிப்பதற்கு அமைச்சரவையின் தீர்மானத்தினை | புதிக குத்தகை ஒப்பந்தமொன்று தயாரித்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன், நிலுவை குத்தகை தொகை அறவிடப்பட்டதன் | புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு மற்றும் அதன் பிரகாரம் குத்தகை கூலி கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுப்பதற்கும் கைப்பணிகள் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. அக் கட்டிடத்திற்கான வரித்தொகை கட்டணம், நீர் கட்டணம் போன்ற செலவினங்கள் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 யூலை 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை குத்தகை கூலி கூட்டுத்தொகை ரூபா 91,921,106.60 ஆகும். மேலும், 2021 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் செலுத்தப்பட வேண்டிய மாதாந்த வாடகை தொகை புதிய குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் கைச்சாத்திடப்பட வேண்டிய புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு மற்றும் அதன் பிரகாரம் குத்தகை கூலி செலுத்தப்படாது அனுமதியின்றி கைப்பணிகள் சபை இந்த கட்டிடத்தினை பயன்படுத்தப்பட்டு வந்தது. | பின்னர் ஒப்பந்தத்திற்கு உடன்படுவதற்கு எதிர்பார்க்கின்றேன். | |

## 2.7 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களுக்கான ‘‘பீ’’ கணக்கிற்கு தொடர்புடைய வருடாந்த இணக்கக் கூற்று பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்த கடன் தொகை ரூபா 934,277 ஆகும். 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட வழிக்காட்டி இல 01 இன் (உ) மற்றும் (ஊ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அக் கடன் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத கடன் விட்டுவிடுவதற்கு, அறவிடப்பட முடியாத மீதிகள் பதிவழிப்பதற்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கோரி கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | இந்த சுற்றறிக்கை பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தொகை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.8. வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் வைப்புக் கணக்குகளில் வைப்பு செய்யப்பட்ட கூட்டுமொத்த பெறுமதி ரூபா 5,213,776 ஆன 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது நிதி பிரமாணம் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் இன்னுமாக செயற்படுத்தப்படாத மற்றும் ஆலோசனை நிறுவனம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்வதற்கும், வருமானத்திற்கு செலவு வைப்பதற்குள்ள மீதிகள் தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் தீர்பனவு செய்வதற்கு அல்லது நிதி பிரமாணம் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஹம்பந்தோட்டை நூதனசாலையின் அலுவலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டு கிரயம் ரூபா 22,509,349 ஆன செயற்திட்டமொன்றிற்கு 2015 நவம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 30 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 18.09 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், காணப்படுகின்ற குறைப்பாடுகள் நிவிர்த்தி செய்து கொடுக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த கட்டிடம் கையேற்கப்பட்டிருந்த போதிலும், அக் குறைப்பாடு 2021 திசெம்பர் 31 ஆம் திகதி | பல சந்தர்ப்பங்களில் இந்த குறைப்பாடுகள் நிவிர்த்து செய்யுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது மிக விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | இந்த குறைப்பாடு தொடர்புடைய தரப்பினர் ஊடாக விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) பிடகொடுவ ஓலந்த நூதனசாலையின் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு செய்வதற்காக கூட்டுத்தொகை ரூபா 97,259,127 ஆன கிரய மதிப்பீட்டிற்கு 2019 ஆம் ஆண்டில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்தது. 2020 மே 01 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த பணிக்கான காலம், 2021 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் இரு சந்தர்ப்பங்களின் போது காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த பணிக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 62,863,055 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு பௌதீக செயன் முன்னேற்றம் 51 சதவீதம் ஆகும். அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட காலம் நீடிக்கப்படாது 03 மாத காலம் கடந்துள்ள இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2022 மார்ச் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஏப்ரல் ஆகையில் 93 சதவீதம் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. செயற்திட்ட பணி விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு முறையாக கையளிக்குமாறு எழுத்துமூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. செயற்திட்ட காலம் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விரைவாக இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு திணைக்களத்திற்கு கட்டிடம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) 2021 ஆகஸ்ட் 04 ஆம் திகதி ரூபா 98.55 மில்லியனான கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் வேலை ஆரம்பிக்கப்பட்ட தேசிய நூதனசாலையின் நூலகத்தின் தீ பாதுகாப்பு முறைமை தாபிக்கும் செயற்திட்டம் 2022 சனவரி 31 ஆம் திகதி பணிகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2022 மார்ச் மாத இறுதியில் பணி பூர்த்தி செய்யப்படுவதற்கான காலம் முடிவடைந்து 02 மாதங்கள் கடந்திருப்பினும், 2021 திசெம்பர் 31 இல் கூட்டுத்தொகை ரூபா 23,429,655 கொடுப்பனவு செய்திருந்த அச் செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் 35 சதவீதமாகக் காணப்பட்டது. | செயற்திட்டத்திற்கு தேவையான உறுப்படிகள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுவதற்கு முடியாதுள்ளது. அதற்காக அமைச்சின் செயலாளரின் ஊடாக கோரப்பட்டுள்ளன. பதில் பெறப்படவில்லை. | நூலக தீ பாதுகாப்பு முறைமை மிக முக்கியமான பணியாகியமையினால் அப் பணியினை நிறைவு செய்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) 2021 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபா 11.6 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நூதனசாலையின் வீட்டுப் பொருட்கள் கணக்காட்சியகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 இல் கூட்டுத்தொகை ரூபா 4,919,333 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பௌதீச செயன் முன்னேற்றம் 45 சதவீதமான இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2022 மார்ச் மாதத்தில் ஒப்பந்தக்காரரினால் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரரினால் அச் செயற்திட்டம் கைவிடப்பட்டமை காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய பணத்தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிடப்பட வேண்டிய பணத் தொகை அறவிடப்படுவதற்கும், செயற்திட்டம் பூர்த்தி செய்வதற்கு தேவையான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் செயற்படல் வேண்டும். |

**3.2. பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 5.4.12 பிரிவின் பிரகாரம் வற் வரிக்காக பணம் செலுத்தப்பட்ட பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அவ் வற் வரி செலுத்தல் தொடர்பான விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் இறைவரி பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டிய போதிலும், பிடகொடுவ ஓலந்த நூதனசாலை பழுதுபார்த்தலுக்கு தொடர்புடைய கொடுப்பனவு செலுத்தும் போது வற் வரி கொடுப்பனவு விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அறிக்கை இறைவரித் திணைக்களத்திற்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது. | பெறுகை வழிக்காட்டி கோவையின் இந்த பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3. நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அத்தனகல்லையில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய படகு 1998 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய நூதனசாலைகள் பூங்காவில் கிழக்கு முனையில் தொல்பொருளியல் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொட்டியொன்றில் நீரில் வைக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் பாதுகாப்பு பணிக்காக, அப் படகு 2021 ஆம் ஆண்டில் பழைய வண்டிகள் வைக்கப்பட்டிருந்த அறைக்கு கொண்டு போகப்பட்டிருந்தது. இந்த படகு தொல்பொருளியல் திணைக்களத்தினால் பாதுகாப்பதற்காக நீண்ட காலம் தொடக்கம் வெவ்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றப்படாமையின் காரணத்தினால் நூதனசாலையில் பொதுமக்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த மிகவும் பெறுமதியான தொல்பொருள் சிதைந்து முற்றிலும் அழிக்கப்பட்டிருந்தது. | இந்த பாதுகாப்பு பணி தொல்பொருளியல் திணைக்களம் மேற்கொண்டதுடன், இந்த திணைக்களம் இடம் வழங்கலினை மட்டும் மேற்கொண்டுள்ளது. | நிறுவனத்தின் விடய பரப்பிற்கு தொடர்புப்படாத பாதுகாப்பு பணி மற்றும் அப் பாதுகாப்பிற்கு முன்னர் பொதுமக்கள் கண்காட்சிக்கு கையேற்கப்படக் கூடாது. |

## 3.4. முகாமைத்துவ நலிவுகள்

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிடகொடுவ ஓலந்த நூதனசாலையின் பாதுகாப்புப் பழுதுபார்ப்பு பணிகள் ரூபா 97.26 மில்லியன் ஆன மதிப்பீட்டு பெறுமதியில் ரூபா 62.8 மில்லியன் மட்டும் செலவிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்தது. பிடகொடுவ குமார வீதியில் அமைந்துள்ள 350 ஆண்டுகள் பழைமையான இந்த நூதனசாலையின் முன்னாள் வாகனங்கள் தரித்து நிறுத்துவதற்கு வசதிகள் காணப்படாமை, அதை பார்வையிட வருகை தரும் தேசிய சர்வதேச சுற்றுலா பயணிகளுக்கு பாரிய தடையாக காணப்பட்டதுடன், 2019 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட அந் நூதனசாலையின் முன்னாளான வாகனங்கள் தரித்து நிறுத்தும் வசதி மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் முடியாதிருந்தது. | இதற்காக பல தடவைகள் கோரப்பட்ட போதிலும், அது மேற்கொள்ள முடியாதென கொழும்பு நகர சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெரும் செலவு ஏற்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட இந்த நூதனசாலை பொதுமக்கள் கண்காட்சிக்காக பயன்படுத்துவதற்கு வாகனமொன்று தரித்து நிறுத்தும் வசதியொன்று தேவைப்படுகின்றதுடன், அவ் வசதி கடந்த காலத்தில் காணப்பட்டமையினால் அதை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) கொழும்பு தேசிய நூதனசாலையின் பூங்கா புனரமைப்பு செயற்திட்டத்தின் கட்டம் I மற்றும் IV இற்காக முதலாவது தயாரிக்கப்பட்டிருந்த கிரய பெறுமதி ரூபா 45,664,195 ஆக காணப்பட்டதுடன், திருத்தப்பட்ட மொத்த கிரய பெறுமதி ரூபா 50,055,355 ஆகும். எனினும் ஒப்பந்தம் வழங்கப்பட்ட பெறுமதி ரூபா 43,337,970 ஆகும். அதன் பிரகாரம் திருத்தப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு மற்றும் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த பணிகளுக்கு இடையே வேறுபாடு 18.37 சதவீதம், அதாவது ரூபா 9,930,968 ஆக காணப்பட்டதுடன், அதன் பிரகாரம் திருத்தப்பட்ட ஒப்பந்த பெறுமதியாக ரூபா 53,268,938 ஆன தொகை பணி நிறைவடைந்தவுடன் அளவிடப்படு | இந்த செய்றதிட்டத்தின் மதிப்பீடு மற்றும் அளவீட்டு தாள்கள் அனைத்தும் ஆலோசனை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டதாகும். அந் நிறுவனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நிறுவனத்தினால் ஆலோசனை நிறுவனத்தினை சார்ந்து செயற்படாது, அமைச்சின் உதவியும் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த பணி ஆரம்பத்தில் சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு பெறுகை பணி சரியாக அடையாளப்படுத்தப்படாமை மற்றும் அளவீட்டு பிழை (Quantity error) காரணத்தினால் கூட்டுத்தொகை ரூபா 9,930,968 ஆன வேறுபாடு தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) தேசிய நூதனசாலையின் கீழ் காணப்படும் அநுராதபுர மற்றும் காலி தேசிய நூதனசாலைகள் அமைந்துள்ள காணிகளின் உரித்து திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு அரச நிறுவனங்களுடன் கடிதங்கள் பரிமாற்றப்பட்டிருந்த போதிலும், 2022 மார்ச் மாதம் வரையிலும் அக் காணி கையகப்படுத்த முடிந்திருக்கவில்லை. | காணியின் உரித்து கையகப்படுத்தல் விரைவுப்படுத்துமாறு பிரதேச செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | இந்த காணி கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) திணைக்களத்திற்கு சொந்தமான ஏனைய பிரதேச நூதனசாலைகளான, ஓலந்த இராணுவ நூதனசாலை, இரத்தினபுரி தேசிய நூதனசாலை, பொலன்னறுவை பழைமையான தொழிநுட்ப நூதனசாலை மற்றும் மாகம்புர ருஹுனு பாரம்பரிய நூதனசாலை தொடர்பாக சொத்துக்கள் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் கணக்காய்வு திகதியாகையில் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு அச் சொத்துக்களின் கிரயம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இந்த சொத்து கையகப்படுத்துவதற்கும், அவை மதிப்பிடப்பட்டு அச் சொத்துக்களின் கிரயம் கணக்கிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 566 ஆக காணப்பட்ட போதிலும், உள்ளவாரான பதவியணி 335 ஆகியமையினால் வெற்றிட எண்ணிக்கை 231 ஆகும். இந்த வெற்றிடங்களில் நிறைவேற்று மட்டத்தின் 16 பதவிகளில் 8 பதவி வெற்றிடங்கள் மற்றும் மூன்றாம் மட்டத்தின் 05 பதவிகளில் 04 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், இந்த ஊழியர் பற்றாக்குறை மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்துக் கொள்வதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ள போதிலும் கிடைக்கப்பெறாமையினால் முடியாதுள்ளது. | இந்த வெற்றிடம் நிரப்பி தருமாறு கோரப்பட்டு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த ஊழிய பற்றாக்குறை நிரப்பப்பட்டு நிறுவனத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் மட்டத்தின் பதவியணி 242 ஆக காணப்பட்ட போதிலும், இந்த மட்டத்தின் உள்ளவாரான பதவியணி 96 ஆகியமையினால் பதவியணியின் வெற்றிடம் 146 ஆக காணப்பட்டது. அவ் வெற்றிடத்தினுள் உள்ளடக்கப்பட்ட MN – 4 தரத்தின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி திணைக்களத்திற்குரிய பதவியொன்றாக காணப்பட்டதுடன், பல ஆண்டுகளாக வெற்றிடமாக காணப்படுகின்ற மிகவும் பொறுப்புள்ள பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றப்பட வேண்டிய இந்த பதவி வெற்றிடம் நிரப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சின் எழுத்து மூல அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், அங்கீகாரம் பெறப்படாமையினால் அப் பதவி இன்னுமாக வெற்றிடமாக காணப்படுகின்றது. | பொது நிர்வாக அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் அமைச்சிற்கு பதவியணி நாளதுவரையாக்கல் தொடர்பாக காலாண்டு ரீதியாக தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | இந்த ஊழிய பற்றாக்குறை பூர்த்தி செயய்ப்பட்டு நிறுவனத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |